## O.S. No. 36/2020 Dt: 10.8.22

**வா.சா.1 அசோக்குமார் மீண்டும் அழைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாசா.ஆ.1ல் "தவறும்பட்சத்தில் நான் தங்கள் வசம் கொடுத்துள்ள வங்கி காசோலைகளை வைத்து சட்டப்படி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்து வசம் செய்து கொள்ள சம்மதம் தெரிவிக்கிறேன்" என்று கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கும் காசோலை வழக்கும் தாக்கல் செய்வதற்கு முன்பு 13.8.2018 அன்று பிரதிவாதி தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை காவல் நிலையத்தில் என் மீது கந்துவட்டி வாங்குவதாக புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு பொய் வழக்கு. முதல் தகவல் அறிக்கை குற்ற எண். 446/2018 என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. மாவட்ட நீதிமன்றத்தில் அந்த வழக்கிற்காக முன்ஜாமீன் வாங்கினேன் என்றால் சரிதான். அதில் 7.10.2018 முதல் 28.10.2018 வரை ஒவ்வொரு வாரமும் த.ம.க. காவல் நிலையத்தில் கையெழுத்திட வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு தான் 4 காசோலைகளை எனது வங்கிக் கணக்கில் செலுத்தி திருப்பப்பட்டதால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதி தரப்பில் பதிலறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதியின் மீது எஸ்.டி.சி. எண்.229/2019 முதல் 232/2019 வரை நான்கு வழக்குகள் இன்றுவரை தஞ்சாவூர், விரைவு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றால் சரிதான். 4 காசோலைகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.62,00,000/-க்கு வழக்கு உள்ளது என்றால் சரிதான். 20.10.2018 தேதியில் ரூ.25,00,000/-மும், 22.10.2018 அன்று ரூ.26,00,000/-மும், 23.10.2018 அன்று ரூ.2,00,000/-மும், 24.10.2018 அன்று ரூ.8,00,000/-மும் பிரதிவாதி என்னிடம் ரொக்கமாக பெற்றுக் கொண்டு அந்தந்த தொகைகளை குறிப்பிட்டு 4 காசோலைகள் 29.10.2018 ஆம் தேதியில் வழங்கியதாகத்தான் காசோலை வழக்குகளில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான் என சாட்சி 4 புகாரின் நகலையும் படித்துப் பார்த்துவிட்டு சொல்கிறார் என்றால் சரிதான். என்னிடம்

காட்டப்படும் எஸ்.டி.சி. எண்.229/2019 ல் புகாரின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம் தான். எஸ்.டி.சி. எண்.230/2019 ல் புகாரின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம் தான். எஸ்.டி.சி. எண்.231/2019 ல் புகாரின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.3. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம் தான். எஸ்.டி.சி. எண்.232/2019 ல் புகாரின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.4. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம் தான். ஹாஜா ஜியாவூதீன் என்பவர் எனக்கு பழக்கமானவர். எனக்கும் அவருக்கும் கொடுக்கல் வாங்கல் உண்டு. அவரை எனக்கு அறிமுகப்படுத்தியவர் பிரதிவாதி என்றால் சரிதான். அவரிடமிருந்து எனக்கு பணம் வரவேண்டியிருக்கிறது என்றால் சரிதான். அதனை நாங்கள் பேசி சரி செய்துகொண்டோம். ஹாஜாஜியாவுதீனுக்கு மனைகள் நிறைய உண்டு. அவர் லேஅவுட் போட்டிருக்கிறார். அவருக்குச் சொந்தமான மனைகளை பொறுத்து பிரதிவாதி பெயருக்கு பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த அதிகார ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதி 1.2.2018 ஆம் தேதியில் எனக்கு 22 மனைகள் ரூ.17,13,000/-க்கு கிரயம் கொடுப்பதாக கிரய ஒப்பந்தம் போட்டார் என்றால் எனக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். அந்த ஆவணத்தில் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. காசோலை வழக்கில் தாக்கல் செய்த திருத்தல் மனுவில், " 1.2.2018 ஆம் தேதியன்று மேற்படி எதிரி என்னிடம் ஒரு கிரய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்தார். அப்பத்திரத்தின் அடிப்படையில் உள்ள நிலமானது எனக்கு தரவேண்டிய பணத்திற்கு பதிலாக ரூ.17,13,000/- பெருமானமுடைய நிலத்தினை 6 மாத காலத்திற்குள் கிரயம் செய்து கொடுப்பதாகவும் குறிப்பிட்டு பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்த ஆவணத்தை சாட்சிகள் முன்னிலையில் எனது பெயருக்கு எழுதிக் கொடுத்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் திருத்தல் மனுவின் நகல் நான் தாக்கல் செய்ததா என்று சரியாக ஞாபகமில்லை. காசோலை வழக்குகளில் திருத்தல் மனு நான் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.1 படி

எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எந்தவிதமான பண பரிமாற்றமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. காசோலை வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு, வா.சா.ஆ.1 ஆவணம் பிரதிவாதிக்கு எதிராக மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி கடந்த டிசம்பர் 2017 ல் என்னிடம் ரூ.10,00,000/- கடனாக வட்டியின்பேரில் பெற்றார் என்றும், அதனை 4 மாத காலத்திற்குள் திருப்பிக் கொடுத்துவிடுவதாக உறுதியளித்து அதற்கு ஆதரவாக 8 வெற்று காசோலைகள், 8 வெற்று கடனுறுதிச் சீட்டுகள், 1 நூறு ரூபாய் பத்திரம் ஆகிய ஆவணங்களில் பிரதிவாதி கையொப்பமிட்டு காப்புறுதியாக கொடுத்தார் எனவும், ஆனால், பிரதிவாதி உறுதியளித்த படி 4 மாதத்திற்குள் பணத்தை திருப்பி செலுத்த முடியாததால் நான் பிரதிவாதியை மிரட்டி அதற்காக பிரதிவாதியிடமிருந்து ரூ-17,13,000/-ற்கு 22 மனைகளை பொறுத்து ஒரு எழுத்துபூர்வமான ஒரு கிரய உடன்படிக்கையை செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிறகு, பிரதிவாதியானவர் தான் பெற்ற ரூ.10,00,000/-த்தை ரொக்கமாக கொடுத்தபோது அதற்கு உடன்படாமல் மேலும் ரூ.10,00,000/- கேட்டதாகவும் அதனடிப்படையில் மார்ச் 2018 ல் ரூ.20,00,000/- ரொக்கம் கொடுத்து தீர்த்தார் எனவும், ஆனாலும், பிரதிவாதி கொடுத்த ஆவணங்களை திருப்பிக் கொடுக்காமல் அலைக்கழித்து வந்து கடந்த ஜுலை 2018 ல் பிரதிவாதியிடமிருந்து ரூ.70,00,000/- நான் ஜியாவூதீன் என்பவருக்கு கொடுத்த தொகையும் சேர்த்து கேட்டேன் என்றும், அதற்கு பிரதிவாதி உடன்படாததால் பிரச்சனை ஏற்பட்டு தகராறு ஏற்பட்டது என்றும் அதனால் தான் பிரதிவாதி எனக்கெதிராக கந்துவட்டி சட்டத்தின் கீழ் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது எனவும் சொன்னால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் தவறு என்றும், நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வா.சா.ஆ.2 அறிவிப்பிற்கு ஏற்கனவே வழக்குகள் நிலுவையில் இருந்ததால் பதிலறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி இந்த

**வழக்கிலும், காசோலை வழக்குகளிலும் என்ன கட்சியாடி வருகிறார் என்று எனக்கு தெரியாது.**

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.